செ.வெ.எண்.298/2009/செமதொஅ நாள்: 15.09.2009

**காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்திலுள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மாலை அணிவித்து, பேரறிஞர் அண்ணா போல் தோன்றிய 100 மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி, கைத்தறி ஆடையை அணிவித்து மகிழ்ந்தார்.**

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு, அவரது நூற்றாண்டு நினைவை குறிக்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பேரறிஞர் அண்ணாவை போல் தோன்றிய 100 பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட இசைப் பள்ளியின் சார்பில் 10 மாணவர்கள் நாதஸ்வர இசையை வழங்கினார்கள். இதனை பார்வையிட்ட மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் நூற்றாண்டு நிறைவு விழாவில் 100 அண்ணாவை கண்டது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தாக தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து 100 மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி, கைத்தறி ஆடையை அணிவித்து பாராட்டினார்.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு, காஞ்சிபுரத்திலுள்ள பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, அலங்கார மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பயன்படுத்திய உடைகள் மற்றும் புத்தகங்கள், அவர் வரைந்த ஓவியங்கள் அனைத்தும் தொல்லியல் துறையின் மூலம் வேதிய பாதுகாப்பு செய்யப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் இல்லத்தில் எல்சிடி தொலைக்காட்சியின் மூலம் “அண்ணா வாழ்கிறார்” என்ற வாழ்க்கை வரலாற்று திரைப்படமும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

இன்று (15.09.2009), மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்திலுள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து தொல்லியல் மற்றும் அருங்காட்சியங்களின் ஆணையரும் முதன்மை செயலருமான திரு.டி.எஸ்.ஸ்ரீதர்,இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.பிரேம் ஆனந்த் சின்கா,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் வரலாற்று சிறப்புமிக்க புகைப்படங்களை பார்வையிட்டு மகிழ்ந்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நகரமன்றத் தலைவர் திரு.வி.இராஜேந்திரன், மாநில கைத்தறி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.பொன்மொழி, மாவட்ட கைத்தறி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.சேகர், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சன்பிராண்ட் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் ஒன்றியக்குழு தலைவர் திரு.பி.எம்.குமார், மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் திரு.வி.எஸ்.ராமகிருஷ்ணன், முதன்மை கல்வி அலுவலர் திரு.வெ.ரமணா, மாவட்ட கல்வி அலுவலர் திரு.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.அசோகன்,

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.ரெ.சுப்ரமணியன், திரு.இரா.நடராசன், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.